DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.65/2024

Deposition of LW9 examined as PW8 Dt. 27.03.2026

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Father Name | ஆறுமுகம் |
| Village | பாண்டூர் |
| Age | 42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.03.26 (A1, A2 present. )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து சமையல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் 2 ஐ எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் சம்பவம் பற்றி எதுவும் கூறி கையெழுத்து பெறவில்லை. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்துகளில் என்னுடையது எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 02.07.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த ராமலிங்கம் என்பவரும் பாண்டூர் கடை வீதியில் நின்று கொண்டு 01.07.2021 ம் தேதி இரவு சுமார் 08.00 மணி அளவில் எதிரிகள் ஊர்ப்பஞ்சாயத்தில் பிரச்சனை செய்தது சம்பந்தமாக வழக்கு கொடுத்திருப்பதாக அ.சா.1 மற்றும் 2 டிடம்
பேசிக்கொண்டிருந்தபோது சம்பவ இடத்திற்கு குத்தாலம் போலிசார் வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் ராமலிங்கம் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றுபோலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

பாலாஜி

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

27/3/26

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை